# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No. : C. C. No. 18/2025**

**Prosecution Witness : P. W. 11**

| | | | |
|---|---|---|---|
| Name | : அன்பரசு | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 09/02/2026

Accused absent.

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது அழிஞ்சிவாக்கத்தில் வசிக்கிறேன். இறந்த பிரகாஷ் எனக்கு மாமா ஆவார். கடந்த 05.02.2024ம் தேதி லாரிக்கு அடியில் அவர் வேலை செய்து கொண்டிருந்த போது, அவர் வேலை செய்வதை கவனிக்காமல் லாரியை சாவி கொண்டு இயக்கியதால் அவருக்கு விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். அவருடைய பிரேதத்தை நல்லடக்கம் செய்வதற்காக பிரேத விசாரணையில் போது போலிசார் என்னை அந்த அறிக்கையில் கையெழுத்து கேட்டார்கள். நான் அதில் 2 வது கையெழுத்து போட்டிருக்கிறேன். **அது அசா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால், சரிதான். கேள்விப்பட்டு தான் சாட்சியம் அளிக்கிறேன். ஊர்க்காரரர் என்ற காரணத்தால் பிரேத விசாரணை அறிக்கையில் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான்.

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No. : C. C. No. 18/2025**

**Prosecution Witness : P. W. 10**

| | | | |
|---|---|---|---|
| Name | : திருநாவுக்கரசு | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 09/02/2026

Accused absent.

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது அழிஞ்சிவாக்கத்தில் வசிக்கிறேன். கடந்த 05.02.2024ம் தேதி எங்கள் வீட்டு பக்கத்தில் வசிக்கும் பிரகாஷ் என்பவர் மெக்கானிக்காக இருந்தார். லாரிக்கு அடியில் அவர் வேலை செய்து கொண்டிருந்த போது, அவர் வேலை செய்வதை கவனிக்காமல் லாரியை சாவி கொண்டு இயக்கியதால் அவருக்கு விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். அவருடைய பிரேதத்தை நல்லடக்கம் செய்வதற்காக பிரேத விசாரணையில் போது போலிசார் என்னை அந்த அறிக்கையில் கையெழுத்து கேட்டார்கள். நான் அதில் 4வது கையெழுத்து போட்டிருக்கிறேன். **அது அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால், சரிதான். கேள்விப்பட்டு தான்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

சாட்சியம் அளிக்கிறேன். ஊர்க்காரர் என்ற காரணத்தால் பிரேத விசாரணை அறிக்கையில் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான்.

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA

## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No. : C. C. No. 18/2025**

**Prosecution Witness : P. W. 9**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுரேஷ் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 09/02/2026

Accused absent.

**<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>**

நான் தற்போது திருநிலையில் வசிக்கிறேன். தேதி நினைவில்லை. பிரகாஷ் எனக்கு நண்பர் ஆவார். அவர் இறந்து 3 நாட்கள் கழித்து போலிசார் வழக்கு விசாரணைக்காக சம்பவயிடத்திற்கு வந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள கையொப்பங்களில் 2 வது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகஜரிலுள்ள 2 வது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்றால், எனக்கு தெரியாது.

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

<u>DEPOSITION OF WITNESS</u>

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

Case No. : C. C. No. 18/2025

Prosecution Witness : P. W. 8

| | | | |
|---|---|---|---|
| Name | : ஸ்ரீதர் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 09/02/2026

Accused absent.

**<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>**

நான் தற்போது அழிஞ்சிவாக்கத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். என் ஊரைச் சேர்ந்த மெக்கானிக் பிரகாஷ் இறந்தது குறித்து கேள்விப்பட்டேன். எப்படி இறந்தார் என்ற விவரம் தெரியவில்லை.

**<u>அரசு தரப்பில் அ.சா.8 யை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரியதின் பேரில், நீதிமன்றம் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி பின்னர் நீதிமன்ற அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை</u>**

**<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>**

கடந்த 05.02.2024 அன்று காலை 11.00 மணியளவில் TN 18 AC 5901 என்ற ஈச்சர் லாரியின் முன்பக்க சக்கரத்தின் அடியில் பழுதை நீக்குவதற்கு அதன் அடியில் உட்கார்ந்து வேலை பார்த்துக் கொண்டிருந்த போது, அந்த லாரியின் ஓட்டுநர் மகேஷ் ராவ் என்பவரை பிரகாஷ் வ்ண்டியை இயக்க சொன்னார். அப்போது அந்த லாரி கியரில் இருந்தது. அவர் அஜாக்கிரதையாக அதை இயக்கினார். லாரி ரிவர்ஸ் சென்று அடியில்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

வேலை பார்த்துக் கொண்டிருந்த பிரகாஷின் இடுப்பில் ஏறி இறங்கியதில் உயிர்நாடியில் அடிபட்டு இரத்தம் கொட்டியதால், 108 ஆம்புலன்ஸக்கு நான் தகவல் அளித்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் இந்த சம்பவத்தை கேள்விப்பட்டு போலிசார் விசாரணையில் தெரிவித்து விட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

எதிரியின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய தயாராக இல்லை.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA

# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No. : C. C. No. 18/2025**

**Prosecution Witness : P. W. 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில்குமார் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 09/02/2026

Accused absent.

**<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>**

நான் தற்போது சோழவரம் செங்களாம்மன் கோவில் அருகே எம்.கே. ஆட்டோமொபைல்ஸ் வைத்து நடத்தி வருகிறேன். என் கடை எதிரே இந்த வழக்கில் இறந்த மெக்கானிக் பிரகாஷ் என்பவர் அடிக்கடி வண்டிகளை பழுதுபார்ப்பார். 05.02.2024 அன்று காலை 11.00 மணியளவில் TN 18 AC 5901 என்ற ஈச்சர் லாரியின் முன்பக்க சக்கரத்தின் அடியில் பழுதை நீக்குவதற்கு அதன் அடியில் உட்கார்ந்து வேலை பார்த்துக் கொண்டிருந்த போது, அந்த லாரியின் ஓட்டுநர் மகேஷ் ராவ் என்பவரை பிரகாஷ் வ்ண்டியை இயக்க சொன்னார். அப்போது அந்த லாரி கியரில் இருந்தது. அவர் அஜாக்கிரதையாக அதை இயக்கினார். லாரி ரிவர்ஸ் சென்று அடியில் வேலை பார்த்துக் கொண்டிருந்த பிரகாஷின் இடுப்பில் ஏறி இறங்கியதில் உயிர்நாடியில் அடிபட்டு இரத்தம் கொட்டியதால், 108 ஆம்புலன்ஸக்கு நான் தகவல் அளித்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் இந்த சம்பவத்தை நேரடியாக பார்த்தேன். ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையிலிருந்த பிரகாஷ் 3 நாட்கள்

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

எதிரியின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய தயாராக இல்லை.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA